11666



வேதபாடங்கள்.

REGISTRAR OF BOOKS
24 JUN 1941
MADRAS

1941—1942

ஈரோடு லண்டன் மிஷன் ஸ்கூல்

லண்டன் மிஷன் பில்கிங்டன் பிரஸ், ஈரோடு.

குறிப்பு.

பாடசாலை, காலையில் கடவுள் வணக்கம் என்னும் சிறு புஸ்தகத்திலுள்ள ஆறு பிரார்த்தனைகளில் ஒன்றை கடவுள் வணக்க ஆராதனையாகக்கொண்டு ஆரம்பிக்கவேண்டும். திங்கட்கிழமை 1-ம் கடவுள் வணக்கம், செவ்வாய்க்கிழமை 2-ம் கடவுள் வணக்கம், புதன்கிழமை 3-ம் கடவுள் வணக்கம், வியாழக்கிழமை 4-ம் கடவுள் வணக்கம், வெள்ளிக்கிழமை 5-ம் கடவுள் வணக்கம், சனிக்கிழமை 6-ம் கடவுள் வணக்கம்.

மாணவர்கள் மறுமொழி சொல்லக் கற்றுக்கொள்ளவேண்டும். பாடசாலை, சாயங்காலம் ஒரு சாதாரண கீர்த்தனை பாடி, கிராம ஜெபப்புஸ்தகத்திலிருந்து வாசிக்கப்படும் ஜெபத்துடனாவது உபாத்தியாயரின் சுயமான ஜெபத்துடனாவது முடிக்கப்படவேண்டும்.

சாதாரணக் கேள்விகளுக்கு பதில் சொல்லவும், கதை சொல்லவும் தக்கதாக பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

4-ம் 5-ம் வகுப்புப் பிள்ளைகள் பாடங்களைப்பற்றி வியாசம் எழுதக்கூடிய திறமைபெறத்தக்கதாகப் போதிக்கப்படவேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்குமுன் பாடங்களைச் சத்தியவேதத்திலிருந்து கவனமாய்ப் படிக்க வேண்டும்.

சாந்தி. சாந்தி. சாந்தி.

இராகம்: பியாக். திஸ்ரஏகதாளம்.

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க, வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய— பாரத

1 இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியுங் கிழங்குந் தானியங்களும்
கணக்கின்றித்தரு நாடு—இது
கணக்கின்றித்தரு நாடு—நித்தம் நித்தம்
கணக்கின்றித்தரு நாடு—வாழ்க— பாரத

2 இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினில் உயிர் கொடுப்போம்-வாழ்க-பாரத

1166

லண்டன் மிஷன் பாடசாலை
வேதபாடங்கள்.
1941-42.

ஜூன் மீ

உமது திருவடிகளுக்கே தோத்திரம்.

சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

1 ஐயனே! உமது திருவடிகளுக்கே
ஆயிரந்தரந் தோத்ரம்!
மெய்யனே! உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம்மாத்திரம்.

264.1

2 சென்றதாம் இரவில் தேவரீரென்னைச்
சேர்த்தரவணைத்தீரே;
அந்தவண்ணமாயிப் பகலிலுங் கிருபை
யாகவா தரிப்பீரே.

3 இருதயந் தனை நீர் புதியதே யாக்கும்!
ஏழையைக் குணமாக்கும்!
கருணையாய் என்னை யுமதகமாக்கிக்
கன்மமெல்லாம் போக்கும்!

24 JUN 1947
MADRAS

4 நாவிழி செவியை, நாதனே, இந்த
நாளெல்லாம் நீர் காரும்
தீவினை விலகிநான் திருமுகம் நோக்க
தெய்வமே, அருள்கூரும்!

330

5 கைகாலால் நான் பவம்புரி யாமல்
கத்தனே துணை நில்லும்!
துய்யனே, உம்மால் தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும்.

6 ஊழியந் தனைநான் உண்மையாய்ச் செய்ய
உதவி நீர் செய்வீரே!
ஏழைநான் உமக்கே இசைபதல் ஆவி
இன்பமாய்ப் பெய்வீரே!

06:446

I, II வகுப்புகள்: பாடம்.

1. தேவாலயத்தில் இயேசு, லூக்: 2: 40—49.
2. இரண்டு குமாரர்கள். மத்: 21. 28—31.

தங்க வசனம்:- யாத் 20: 12. உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணவேண்டும். அப்படிச் செய்தால் கடவுளாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே நீ நெடுநாளிருப்பாய்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. வனாந்தரப் பிரசங்கி லூக். 3: 2. 3, 10—16.
2. இயேசுவின் ஞானஸ்நானம். மத். 3: 13—17.
3 இயேசுவின் சோதனை. லூக். 4: 1—13.
4. இயேசுவின் முதல் பிரசங்கம் லூக் 4: 16—24.

மனப்பாடவசனம்: (மத். 5: 3—10)

1. ஆவியில் தரித்திரர் பாக்கியர்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
2. துயரப்படுவோர் பாக்கியர்; அவர்கள் தேற்றப்படுவார்கள்.
3. சாந்தகுணமுடையோர் பாக்கியர்; அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.
4. நீதியின்மேல் பசிதாகமுடையோர் பாக்கியர்; அவர்கள் திருப்தியடைவார்கள்.
5. இரக்கமுடையோர் பாக்கியர்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
6. இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கியர்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.
7. சமாதானம் பண்ணுவோர் பாக்கியர்; அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவார்கள்.
8. நீதியினிமித்தம் இம்சையனுபவிப்பவர் பாக்கியர்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

ஜூலை மீ

உன் பாதம் ஒன்றே வேணும்

உசேனி. ரூபகதாளம்.

பல்லவி

பாதம் ஒன்றே வேணும்; — இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்— உன்

சரணங்கள்

1. நாதனே, துங்க மெய்—வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ப—தூதர் தொழுஞ் செய்ய,— பாதம்

2. சீறும் புயலினால்—வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உன்— பாதம்

3. வீசுங் கமழ் கொண்ட—வாசத் தைலத்தை
ஆசையுடன்-மரி-பூசிப் பணிந்த பொற்— பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்—தூக்கி நடந்த நற்— பாதம்

5. ஞானிலத்தோர் உயர்—வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்—தானே கொடுத்த உன்— பாதம்

6. பாதம் அடைந்தவர்க்—காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு—நாதனே, என்றும் உன்— பாதம்

I, II வகுப்புகள்:— பாடம்:—

1. பர்த்திமேயு என்னும் குருடன். லூக். 18: 35-43.
2. பத்து குஷ்டரோகிகள். லூக். 17: 12-19.

தங்க வசனம்:— யோவான். 8: 12.

மறுபடியும் இயேசு அவர்களிடம் பேசி: நானே உலகத்திற்கு வெளிச்சம்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடக்கவே மாட்டான், ஜீவ வெளிச்சத்தை அடைந்திருப்பான் என்றார்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. மத்தேயுவை இயேசு அழைத்தல். லூக். 5: 27—32.

2. திமிர்வாதக்காரனைச் சுகப்படுத்தல். லூக். 5: 18–26.

3. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைச் சுகப்படுத்தல். லூக் 7. 1—10.

4. இராஜாவின் உத்தியோகஸ்தரின் மகனைச் சுகப் படுத்தல். யோவா. 4: 46—54.

மனப்பாட வசனம்: (சங்: 119: 33—38)

1. கர்த்தாவே, உமது நியமங்களின் வழியை எனக்குப் போதித்தருளும்; முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக் கொள்ளுவேன்.

2. எனக்கு உணர்வைத் தாரும்; நான் உமது பிரமாணத்தைக் காத்துக்கொள்வேன்; என் முழுஇருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்.

3. உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தியருளும்; அதில் நான் பிரியங்கொள்ளுகிறேன்.

4. பொருளாசையல்ல, உமது சாட்சியங்களையே, என் இருதயம் சாரும்படி செய்தருளும்.

5. வீணானவற்றைப் பாராதபடி நீர் என் கண்களைத் திருப்பியருளும்; உமது வழிகளில் என்னை உயிர்ப்பித்தருளும்.

6. உமக்குப் பயப்படுகிறதற்கு ஏதுவான உமது திருவசனத்தை உமது அடியேன் விஷயத்தில் உறுதிப்படுத்தியருளும்.

ஆகஸ்டு மீ

ஜெபமறவாதே நேசனே.

கமாஸ்.

ஆதிதாளம்.

பல்லவி

ஜெபமறவாதே நேசனே—எக்காலமும் நீ!

சரணங்கள்

1. ஜெபம் பரமனுடன் பேச்சு;
தேவை யெல்லாம் அத்தா லாச்சு;
தப விசுவாசி மூச்சு;
தகாதெலாம் அத்தாற் போச்சு.— ஜெப

2. விசுவாச நேசத்தோடு
மிகும் பக்தியோடு நாடு;
நிசமாய்ப் பரனைத் தேடு;
நேர்மையுடனே ஓடு.— ஜெப

3. பகலுட னிரவிலும்,
பணிவுடன் குறைவிலும்,
திகிலிலும் மகிழ்விலும்,
செல்வம் வறுமையிலும்.— ஜெப

4. தேவ அரசாட்சிக்காக
ஜெபி, உந்தன் குறைபோக;
ஆவலுடன் பிறர்க்காக
அன்புடன் ஜெபிப்பாயாக.— ஜெப

5. மறந்திடாதே ஜெபமே
மறக்கில் நீ ஓர் சவமே;
சிறந்த உன் வீடவமே;
செய்ய வாயோ பவமே.— ஜெப

I, II வகுப்புகள்: பாடம்.

1. கண்டுபிடிக்கப்பட்ட ஆடு. லூக். 15: 3—7.

2. நல்ல சமாரியன். லூக். 10: 30–37.

தங்கவசனம். யோவான் 10: 14. நானே நல்ல மேய்ப்பன். பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்திருக்கிறேன், என்னுடையவைகள் என்னை அறிந்திருக்கின்றன; ஆடுகள் பொருட்டு என் ஜீவனையும்கொடுக்கிறேன்.

III, IV, V வகுப்புகள். பாடம்:

1. முப்பத்தெட்டு வருஷ நோயாளியைச் சுகப்படுத்தல். யோவா. 5: 1—16.

2. இரண்டு குருடர்கள். மத். 9: 27—31.

3. சந்திரரோகியான குமாரனைச் சுகப்படுத்துதல். மத். 17: 14—21.

4. பத்துக் குஷ்டரோகிகளைச் சுகப்படுத்துதல். லூக். 17: 12—19.

மனப்பாட வாக்கியம். (நீதிமொழிகள். 23: 20, 21, 29-32)

1. மதுபானப் பிரியரோடும் மாமிசப் பெருந்தீனிக்காரரோடும் உறவாடாதே.

2. குடியன், பெருந்தீனிக்காரன் தரித்திரனாவான், நித்திரைப் பிரியம் கந்தைகளை உடுத்துவிக்கும்.

3. ஐயோவென்று அழுவார் யார்? அந்தோ என்பவரார்? யாருக்குச் சண்டைகள்? எவருக்குப் புலப்பம்? யாருக்குக் காரணமில்லாக் காயம்? எவருக்கு மங்கலான கண்கள்?

4. மதுபானமுள்ள இடம் தங்கித் தரிப்பாக்கும் திராட்சரசக் கலப்பைச் சோதிப்போர்க்குமே.

5. திராட்சரசம் கண்டு அது எத்தனை சிவப்பென்றும் பாத்திரத்திலே அது பளபளப்பாய்த் தோன்றுமென்றும் மெதுவாய் இறங்கிடுமென்றும் உரையாதே.

6. முடிவிலே அது பாம்புபோற் கடிக்கும், விரியன் பாம்புபோலத் தீண்டும்.

செப்டம்பர் மீ

வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

நாதநாமக்ரியை. சாபுதாளம்.

பல்லவி

வாரா வினை வந்தாலும், சோராதே, மனமே;
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

சரணங்கள்

1

அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்
அஞ்சாதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே;— வாரா

2

உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்,
உறுதிவிட்டயராதே, நெறி தவறாதே;— வாரா

3

பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே.— வாரா

4

தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசுநாதர்
தள்ளுவாரோ? அன்பு கொள்ளவர் மீதே.— வாரா

5

மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே.— வாரா

6

வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?
வானவனை முற்றும் தான் அடைவாயே!— வாரா

I, II வகுப்புகள்: பாடம்.

1. இரண்டு அஸ்திபாரங்கள். லூக். 6: 46—49.

2. கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிக்காசு. லூக். 15: 8—9

தங்கவசனம்: லூக். 19: 10 காணாமற்போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. நீர்க்கோவை வியாதியஸ்தனைச் சுகப்படுத்துதல். லூக். 14: 1—14.

2. ஐயாயிரம் பேரைப் போஷித்தல். யோவா. 6: 1–14.

3. லாசருவை உயிரோடு எழுப்புதல். யோவா. 11:1-46

மனப்பாட வசனம்: (சங். 145: 8, 9, 14, 17.)

1. கர்த்தர் இரக்கமும், உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.

2 கர்த்தர் எல்லார்மேலும் கருணையுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய சகல சிருஷ்டிகளின்மேலுமுள்ளது.

3 கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்குகிறார்; கொடுந்து போன யாவரையும் தூக்கிவிடுகிறார்.

4 கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர்; தமது செய்கைகளிலெல்லாம் கிருபையுள்ளவர்.

அக்டோபர் மீ

பாலர் நேசனே.

மோகனம். திஸ்ர ஏகதாளம்.

பல்லவி

பாலர் நேசனே,—மிகப்—பரிவுகூர்ந்திந்தப்
பாலரை யேந்தி—ஆசீர்—வதியும், யேசுவே!

சரணங்கள்

1

பாலர் வந்திடத்—தடை—பண்ணுறதென்றீர்;
சால வந்தருள்—தந்து—தலைமேற் கைவைப்பீர்.— பாலர்

2

வான ராச்சியம்—இவர்—வசத்த தென்றீரே;
ஞானஸ்நானத்தால்—உந்தன்—நாமஞ்சூட்டுவீர்.— பாலர்

3

கானம் பாடியே—பாலர்,—கர்த்தரே யுமைத்
தாவீதின் ஓசன்னா!—எனச்—சத்தமிட்டாரே.— பாலர்

4

தேவ பாலனே,—நீருஞ்—சிறிய பிள்ளையாய்
மேவினதால்—உமை—வேண்டினோ மையா.— பாலர்

5

ஆவியா லிவர்—ஞான—அபிஷேகம் பெற,
ஜீவ நேசரே,—அருள்—சிறியர்க் கீவீரே.— பாலர்

6

தாசர் நாங்கள்—செய்—வாக்குத்—தத்தம் மீறாமல்,
நேச யேசுவே,—யெமை—நிலைநிறுத்துவீர்.— பாலர்

I, II வகுப்புகள்: பாடம்.

1. ஒழித்து வைக்கப்பட்ட குழந்தை. யாத். 2: 1—10.

2. சாமுவேலை அழைத்தல். I சாமு. 2: 18, 19; 3:1–10.

தங்கவசனம். மத். 5:8. இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கியர்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. ஒரு குமாரன் வேண்டுமென்று அன்னாள் செய்த பிரார்த்தனை. I சாமு. 1: 9—18.

2. சாமுவேலை பிரதிஷ்டை செய்தல். I சாமு. 1: 20–28.

3. சாமுவேலை அழைத்தல். I சாமு. 3: 1—19.

4. சாலோமோனின் கனவு. I இராஜா. 3:5–15.

மனப்பாட வசனங்கள். யோவான். 15: 1—8.

1. நான் மெய்யான திராட்சச்செடி, பயிரிடுகிறவர் என் பிதா.

2. என்னில் கனிகொடாத கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனிகொடுக்கிறகொடி எதுவோ அது அதிக கனி கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்.

3. நான் உங்களிடம் பேசியிருக்கிற வார்த்தையினால் நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.

4. என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமுடியாதே. என்னில் நிலைத்திராவிட்டால் நீங்களும் அப்படியே.

5. நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகொடுப்பான். என்னையல்லாமல் நீங்கள் ஒன்றுஞ் செய்ய முடியாது.

6. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் கொடியைப் போல வெளியே எறியுண்டு உலர்ந்துபோவான்; அவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள், எரிந்துபோம்.

7 நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள், அது உங்களுக்கு ஆகும்.

8. நீங்கள் மிகுந்த கனிகொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

நவம்பர் மீ

சிறியோர் பெரியவை செய்வார்.

பியாகு. சாபுதாளம்.

(கண்களை ஏறெடுப்பேன் என்ற இசை)

பல்லவி

சிறியோர் என்ன செய்வார்—பிறர்க்குதவியாகச்
சிறியோர் என்ன செய்வார்.

அனுபல்லவி

சின்னஞ் சிறியோரைத் தேவசுதன் தொட்டால்
பென்னம் பெரியவை பேணியே செய்குவார்.

சரணங்கள்

1

பெரிய தோராயினும்—சிற்றுணியின்றிப்
பிரிந்து போத மன்றோ!
பரிந்து பேசின பாலிய பேதையே
பெரிய நாகமான் தனக்குதவினுள்.

2

மன்னவன் சவுலினது மயல்கொண்டமனதைச்
சின்ன தாவீது வந்து
முன்னிலையில் ஒரு வீணையை வாசித்து
இன்னிசை செய்து நீக்கிவிட்டானன்றோ?

3

அடிமை யோசேப்பென்பான்—அரன்கிருபை பெற்று
மிடியைத் தீர்த்துவிட்டான்;
முடிமன்னனுக்குச் சொப்பனமறிவித்துக்
கொடிய பஞ்சத்தை நீக்கிவிட்டானன்றோ?

I, II வகுப்புகள்— பாடம்—

1. சீமோனின் மாமியைச் சுகப்படுத்தல். மார்க். 1: 29–34.

2. கூனியான ஸ்திரீயைச் சுகப்படுத்தல். லூக்கா. 13: 10—13.

தங்கவசனம். 1 யோவான். 4: 8.

அன்புகூராதவன் கடவுளை அறிந்துகொள்ளவில்லை; கடவுள் அன்பே.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. ஐசுவரியவானும் லாசருவும். லூக். 16: 19–31.
2. ஐசுவரியவானான மூடன். லூக். 12: 16-21.
3. பத்து கன்னிகைகள். மத். 25: 1—13.
4. நடுஜாம சிநேகிதன். லூக். 11: 5 — 8.

மனப்பாட வசனங்கள். மல்கியா 3: 10–13.

1. என் வீட்டில் ஆகாரம் இருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்படிச் செய்து என்னைப் பரீட்சித்து நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவெனப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

2. பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்களுக்கெனக் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வயலிலுள்ள திராட்சச்செடி பழமற்றுப்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

3. அப்பொழுது சகல ஜாதியாரும் உங்களைப் பாக்கியர் என்பார்கள்; உங்கள் தேசம் இனியதாகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

4. நீங்கள் கடின வார்த்தைகளை எனக்கு விரோதமாய்ப் பேசினீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நீங்களோ, உமக்கு விரோதமாக நாங்கள் எங்களுக்குள் பேசியதென்ன என்கிறீர்கள்.

டிசம்பர் மீ

வாரும் பெத்லகேம்.

சங்கராபரணம். ஆதிதாளம்.

1

வாரும், பெத்லகேம் வாரும்,—வாரும்,
வரிசையுடனே வாரும்;
வாரும், எல்லோரும் போய் வாழ்த்துவோம் ஏசுவை,
வாரும், விரைந்து வாரும்.

2

எட்டி நடந்து வாரும்,—அதோ
சற்று நிமிர்ந்து பாரும்,
பட்டணம்போல் சிறு பெத்லகேம் தெரியுது,
பாரும் மகிழ்ந்து பாரும்.

3

விண்ணுலகாதிபதி,—தீர்க்கர்
சொன்னதிலுள்ளபடி
மண்ணுலகில் மரிகன்னி வயிற்றினில்
மானிடனாயுதித்தார்.

4

சொல்லுதற் கரிதாமே,—ஜோதி
சுந்தர சோபனமே;
புல்லணையிற் பசுமுன்னணையிற்பதி
பூபதிதான் பிறந்தார்.

5

மங்கை மாடடையில்—மாது
மரியவள் மடியதனில்,
கந்தைத் துணியதை விந்தைத் திருமகன்
காரணமா யணிந்தார்.

I, II வகுப்புகள். பாடம்:

1. இயேசுவின் பிறப்பும் இடையர்களும். லூக். 2: 1–20.
2. இயேசுவின் பிரதிஷ்டை. லூக். 2: 21–35.

தங்கவசனம். லூக். 2: 11. இன்று ஆண்டவராகிய கிறிஸ்து என்னும் உலக இரட்சகர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. இயேசுவின் பிறப்பும் இடையர்களும். லூக். 2: 1–20.
2. இயேசுவின் பிறப்பும் சாஸ்திரிகளும். மத். 2: 1–12.
3. இயேசுவின் பிரதிஷ்டை. லூக். 2: 21–35.

மனப்பாட வசனங்கள். (ஏசாயா. 9: 2, 6, 7.)

1. இருளில் நடக்கிற ஜனங்கள் பெரு வெளிச்சங்காண்பார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள்மேல் வெளிச்சம் உதிக்கும்.

2. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; ராஜாதிகாரம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமான ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள கடவுள், நித்திய பிதா, சமாதானப்பிரபு எனப்படும்.

3. தாவீதின் சிங்காசனத்தையும் அவன் ராஜ்யத்தையும் அவர் பலப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்துவதற்கென அவருடைய ராஜாதிகாரப் பெருக்குக்கும் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

ஜனுவரி மீ

பிள்ளைகள் பெரியவைகளைச் செய்யலாம்.

ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

(தேவனே நான் உமதண்டையில்— என்ற மெட்டு)

பல்லவி

சின்ன பிள்ளை நான் என்ன செய்வேன்—மற்றோர்களுக்குச்
சின்ன பிள்ளை நான் என்ன செய்வேன்

அனுபல்லவி

சின்னஞ் சிறியவர்களைத் தேவசுதன் தொட்டுவிட்டால்
பென்னம் பெரு நன்மைகளைப் பிரியமுடன் செய்வரவர்.— சின்

சரணங்கள்

1 தேர் மிகப் பெரிய தானலும்—சிற்றாணியின்றிச்
சின்ன பின்ன மாகிப் போகுமே.
ஓர் சிறிய பேதையல்லோ உயர்குலத்தான் நாகமாற்கு
ஆரகற்றரிய நோயைத் தீர்க்கப் பேருதவி செய்தாள்.— சின்

2 சின்னத்திரியும் ஓர் பெரிய—வீடுமுழுதும்
சீர்மையாக ஒளிசெய்யுமே.
மன்னன் போன்ற ஏலிநபியை மருவிச்சின்ன சாமுவேலும்
சொன்ன அருங்காரியத்தைச் சூழ்ந்துகொள்வீர்
சிறியோரே.—
சின்

3 மன்னவன் சவுலிடமே வந்த—பொல்லாத ஆவி மாறிவிட்ட
வாறு கேளுமே;
சின்னவன் தாவீது வீணை சிறப்பாய் வாசித்துப் பாடி
அன்ன ஆவி ஓட்டிவிட்டான் அயனைச் சேவித்துக்கொண்டு—
சின்

4 அன்பான உன்சிறு சொற்களால்—பிறர்நயநோக்கும்
ஆவலான பிரார்த்தனையாலும்
இன்புறு நன்னடக்கையாலும் ஈசன் தந்த பணபினாலும்
துன்புறு மிவ்வுலகத்தில் துயரை நீ நீக்க வல்லோனா — சின்

I, II வகுப்புகள்: பாடம்.

1. இழுப்புவலிப்புள்ள பையனைச் சுகப்படுத்தல். லூக். 9: 37-43.

2. சிறு பிள்ளைகளை ஆசிர்வதித்தல். மார்க். 10:13-16.

தங்கவசனம். மார்க். 10: 14. சிறு பிள்ளைகள் என்னிடம் வர இடங்கொடுங்கள். அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். கடவுளின் ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.

III, IV, V வகுப்புகள். பாடம்:

1. தாலந்தின் உவமை. மத். 25: 14-30.

2. பரிசேயனும் ஆயக்காரனும். லூக். 18: 9-14.

3. கெட்ட குமாரன். லூக். 15: 11-32.

4. நல்ல மேய்ப்பன் யோவா. 10: 1-5; 11-14.

மனப்பாட வாக்கியம். (சங். 15: 1—5)

1. கர்த்தாவே, உமது கூடாரத்தில் தங்குபவன் யார்? உமது பரிசுத்த பர்வதத்தில் வாசமாயிருப்பவன் யார்?

2. உத்தமனாய் நடந்து, தர்மவழியில்சென்று, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே.

3. அவன் தன் நாவினால் புறங்கூறான், தன் தோழனுக்குத் தீங்கு செய்யான், தன் அயலான்மேல் நிந்தை சுமத்தான்.

4. மதிக்கத்தகாதவனை அவன் மதியான், கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுவான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் மாறாதிருப்பான்.

5. தன் பணத்தை வட்டிக்குக் கொடான், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்கான்.

பெப்ரவரி மீ

இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தினது.

"ஓடிவிளையாடு பாப்பா" என்ற மெட்டு.

தேசிய தோடி. ஆதிதாளம்.

1

கப்பலில் ஏறி ஏசு கர்த்தன்—ஓர்நாள்
கடந்தார் கலிலேயாக் கடலை;
கஷ்டப்பாட்டினால் கண்ணை மூடி—நன்றாய்
களைப்பாற கண்டது காற்று.

2

கப்பல் கவிழ்ந்துபோம் போல—கடும்
கனத்த புயல் எழும்பக்கத்திக்
கதறிப்பன்னிரு சீஷர் கலங்கி—நின்று
கர்த்தனைக் கூவினார் காப்பாற்ற.

3

மடிந்து மாள்கிறோம் என்று சீடர்—மறுகி
மனங்கொதித்து மகிபனைக்கிட்டி,
மரணம் விழுங்கும் முன்னே எழுந்து—எம்மை
மனமிரங்கி இரட்சியும் என்றார்.

4

அவர் அற்பவிசுவாசம் அறிந்து—இயேசு
அழகு நகையுடனே எழுந்து
அமளி இரைச்சல் செய்யவேண்டாம்,—கடலே,
அமைதிகொள் என்றதட்டி நின்றார்.

5

அச்சணமே அமைதியுண்டாக—சீடர்
ஆனந்தம் கொண்டாடியே மெச்சி,
ஆ ஆ! அதிகாரம் அதிசயமே என்று
அகம் களித்தார் அந்த நாளில்.

I, II வகுப்புகள்: பாடம்.

1. யவீரின் மகளை எழுப்புதல். லூக். 8: 41, 42, 49-56.
2. குஷ்டரோகியைச் சுகப்படுத்தல். லூக். 5: 12—16.

தங்கவசனம்:— மத். 5: 7. இரக்கமுடையோர் பாக்கியர்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. அடைக்கலான் குருவிகளைக் கவனித்தல். லூக். 12: 4—7.
2. காகங்களையும் காட்டுப் புஷ்பங்களையும் கவனித்தல். லூக். 12: 22—31.
3. உண்மையான பொக்கிஷம். மத். 6: 19—21.
4. மரியாதையற்ற சிநேகிதர்கள். லூக். 14: 16–24.

மனப்பாட வாக்கியங்கள். ஏசாயா. 55: 1, 2, 6, 7.

1. ஓ தாகமாயிருப்போரே, எல்லோரும் தண்ணீரண்டை வாருங்கள்; பணமில்லாதவரே, வாருங்கள், வாங்கிச் சாப்பிடுங்கள்; வாருங்கள், பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் வாங்கிக்கொள்ளுங்கள்.

2. உணவாகாத பொருளைப் பெற பணம் செலவிடுவானேன்? உழைத்துச் சம்பாதித்ததைத் திருப்தி செய்யாப் பொருளைப் பெறச் செலவிடுவானேன்? நான் சொல்வதைக் நீங்கள் கவனித்துக் கேளுங்கள், அப்பொழுது நலமானதைச் சாப்பிடுவீர்கள்; நீங்கள் கொழுப்பான பதார்த்தத்தை உண்டு களிப்பீர்கள்.

3. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்திலேயே அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையிலேயே அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

4. தெய்வபயமற்றவன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு கர்த்தரிடம் திரும்புக, அவர் அவன் மேல் மனதுருகுவார்; நமது கடவுளினிடமே திரும்புக, அவர் மன்னிப்புக்கு அளவில்லை.

மார்ச் மீ

தேவாசனபதி.

காம்போதி. ஆதிதாளம்.

1 தேவாசனப்பதியும், சேனை தூதரைவிட்டுத்
தேவர் குலமாய் வாறதாரையா? இவர்
தேவனுரைப்படி,
பாவ வினைப்படி,
ஏவை மனப்படி,
ஆவல் மிகப்படி,
வணங்குஞ் ஜெகஜோதிப் பொருள் தானையா.— இவர்

2 முன்னணி பின்னணியினி லோசன்னா! ஓசன்னா வென
ஓர் மறியின் மீதில் வாறதாரையா? இவர்
உத்தம நேசனும்,
சத்திய போசனும்,
பத்தரின் வாசனும்,
நித்திய ஈசனும்,
உன்னதத்தின் மேன்மைத் தெய்வர் தானையா.— இவர்

3 பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திடவும்
பாவலருடன் வாறதையா? இவர்
பசியற்றிருந்தவர்,
பொசிப்பற்றிருந்தவர்,
வசை பெற்றிருந்தவர்,
அசைவற்றிருந்தவர்,
பாவ விமோசன ராசன் தானையா.— இவர்

4 வழியில் மாக் கிளைகள் வரிசையதாய்ப் பரப்ப
வஸ்திரமீதில் வருவதாரையா? இவர்
வல்லவராங் குரு,
சொல் தவறுக் குரு,
நல்லவராங் குரு,
துல்லிய சற் குரு,
வரமிகுத்த சற்குரு தானையா.— இவர்

I, II வகுப்புகள்: பாடம்.

1. இயேசுவின் பவனி. மார்க். 11: 1—11.
2. இயேசுவின் மரணம். லூக். 23: 1, 13—37.
3. இயேசுவின் உயிர்த்தெழுதல். லூக். 24: 1-3, 9, 11-16, 28-31.

தங்கவசனம். I யோவான். 4: 11. கடவுள் இவ்விதமாய் நம்மில் அன்புகூர்ந்திருக்க நாமும் ஒருவரிலொருவர் அன்பு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

III, IV, V வகுப்புகள். பாடம்:

1. விலையேறப்பெற்ற தைலம். மார்க். 14: 3—9.
2. கடைசி இராப்போஜனம். மார்க். 14: 17-26.
3. கெத்செமனே தோட்டம். மார்க். 14: 32-46.
4. இயேசுவின் மரணம் லூக் 23: 20-24, 26, 32-46.

மனப்பாட வசனங்கள். ஏசாயா. 53: 3—7.

1. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் விட்டுவிடப்பட்டவரும், வேதனையுற்றவரும் நோய் அனுபவமுள்ளவருமாய் இருந்தார்; கண்டோர் முகந்திருப்பும் தோற்றமுள்ளவன்போன்றார்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; நாம் அவரை மதிக்கவில்லை.

2. மெய்யாகவே, அவர் ஏற்றுக்கொண்டது நமது நோய்கள், அவர் சுமந்தது நமது வேதனைகள், நாமோ, அவர் வாதிக்கப்பட்டவர், கடவுளால் அடிக்கப்பட்டவர் சிறுமைப்பட்டவர் என்று மதித்தோம்.

3. அவர் காயப்பட்டது நமது மீறுதல்களினிமித்தமே, அவர் நொறுக்கப்பட்டது நமது அக்கிரமங்களினிமித்தமே, நமது சமாதானத்துக்கான சிக்ஷை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாக்கப்பட்டோம்.

4. நாமெல்லோரும் ஆடுகளைப்போல் வழிதப்பித்திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போகத் திரும்பினோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்.

5. அவர் வாதிக்கப்பட்டபோது தம்மைத் தாழ்த்தி வாய் திறவாதிருந்தார்; அடிப்பதற்குக் கொண்டுபோகப்படும் ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும் மயிர் கத்திரிக்கிறவன்முன் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் இருந்தார்; அவர் தமது வாயைத் திறக்கவில்லை.

ஏப்ரல் மீ

உயிர்த்த நாதருக்கே மங்களம்.

சங்கராபரணம். சாபுதாளம்.

பல்லவி

சுபஜெய மங்களமே-நித்திய சுபஜெய மங்களமே
சுகமே-தரவே-புவிமீ-துயிர்த்தசுதனேசு நாதருக்கே.

1 தீர்க்க ருரைத்தனரே,-நின்று
ஜேசு உயிர்த்தனரே;
ஜெகதீஸ்-பரனார்-சுதனார்-கிறிஸ்து
ஜெயமா யெழுந்தவர்க்கே.— சுப

2 தூதர்-சங்க முழங்க,-வானம்
ஜோதியினு விலங்க,
தூரிதாய்ப்-பரனார்-களிகூர்ந்-திடவே
தொனியா யெழுந்தவர்க்கே.— சுப

3 அங்கங் குளிர்ந்திடவே,-உல
கெங்கும் மகிழ்ந்திடவே,
அடியா-ருடசா-வுடகூ-ரொடித்து
அகில மெழுந்தவர்க்கே.— சுப

4 காலையிலே எழுந்து-நிதம்
கர்த்தனையே நினைத்து,
கானமே-குவித்துத்-துதிபா-டிடவே
காலை லெழுந்தவர்க்கே.— சுப

5 ஆனந்தம் பாடிடவும்,-பரன்
அன்பைக் கொண்டாடிடவும்,
அசையா-நிலையோ-டெழுந்து-தொழவே
அருள் கூர்ந்திடு பவர்க்கே.— சுப

6 எக்காளமே தொனிக்க-பக்தர்
யாவருமே யெழும்ப,
இனிதா-யரசா-ளவுமேயுலகில்
எழு மிப்மானு வேலர்க்கே.— சுப

I, II வகுப்புகள். பாடம்:

1. விதவையின் காணிக்கை. லூக். 21: 1—4.

2. சூம்பின கையுடையவன் சுகமாக்கப்படுதல். லூக். 6: 6—11.

தங்கவசனம்: மத். 5: 5. சாந்தகுணமுடையோர் பாக்கியர்; அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

III, IV, V வகுப்புகள்: பாடம்.

1. உயிர்த்தெழுந்த காலை. யோவான். 20: 1–20.

2. இயேசு தோமாவுக்கு வெளிப்படல். யோவா. 20: 24—29.

3. நற்பழக்கங்கள். மத். 14: 7—11.

4. நல்ல நோக்கம். மத். 19: 16—22.

மனப்பாட வசனங்கள். லேவி. 19: 11–14; 16, 17, 18.

1. நீங்கள் களவுசெய்யவேண்டாம், வஞ்சனை பண்ணவேண்டாம், ஒருவருக்கொருவர் பொய் சொல்லவேண்டாம்.

2. என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிட்டு உங்கள் கடவுளின் திருநாமத்தைப் பரிசுத்தமற்றது போலாகும்படி செய்யவேண்டாம்; நானே கர்த்தர்.

3. அயலானை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருங்கள்; கூலிவேலை செய்தவனுடைய கூலி இராவெல்லாம் விடியற்காலமட்டும் உன்னிடம் இருக்கவேண்டாம்.

4. செவிடனைச் சபியாதே. குருடனுக்குமுன்னே தடுக்கலை வையாதே, உன் கடவுளுக்குப் பயந்திரு; நானே கர்த்தர்.

5. உன் ஜனத்துக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாதே; வழக்கிலே அயலானுடைய இரத்தத்தை வாங்கத் தேடவேண்டாம்; நானே கர்த்தர்.

6. உன் சகோதரனை உன் உள்ளத்திலே பகையாதே; பிறனிமித்தம் உன்மேல் பாவம் சுமராதபடி அவனைக் கடிந்துகொள்வதே சரி.

7. பழிக்குப்பழி வாங்காதே, உன் ஜனப்புத்திரர்மேல் கோபத்தில் நிலைத்திராதே; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் அயலானிடத்திலும் அன்புகூரவேண்டும்; நானே கர்த்தர்.

ஜெபங்கள்.

காலை ஜெபம்.

அன்புள்ள ஆண்டவரே! இரவின் சுக நித்திரைக்காகவும் அதிகாலையின் சூரிய வெளிச்சத்திற்காகவும் உம்மைத் துதிக்கிறேன். இந்தப் பகல் முழுவதும் செய்யும் வேலைகளை ஊக்கமாய்ச் செய்ய எனக்கு உதவி செய்யும். இன்று நேரிடக்கூடிய சோதனைகளிலும் கஷ்டங்களிலும் என்னோடு இருந்து தாங்கியருளும். இந்த நாளில் உற்சாகமாக உதவிபுரிய எனக்குக் கிருபை செய்யும்.

என் தாய் தகப்பன் சகோதர சகோதரிகள் யாவரையும் ஆசீர்வதியும். இயேசுக்கிறஸ்துவின் நிமித்தம் என் ஜெபம் கேளும்சுவாமி! ஆமென்.

காலை ஜெபம்.

என் பிரியமுள்ள சுவாமி, இராவெல்லாம் நல்ல தூக்கம் தந்தீர். காலையில் நல்ல வெளிச்சம் தந்தீர். உமக்கே தோத்திரம், சுவாமி. இந்தப் பகலெல்லாம் எனகூடவே இரும். இன்று நான் பேசுகிறதும் செய்கிறதும் எல்லாம் உமக்குச் சந்தோஷமாய் இருக்கும்படி உதவிசெய்யும். உலகத்தில் என்னைப் போல் இருக்கும் எல்லாப் பிள்ளைகளும் சந்தோஷமாயிருக்க உதவிசெய்யும். நான் நாள் முழுவதும் குற்றம் செய்யாமல் இருக்க உதவி செய்யும். இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன், ஆமென்.

மாலை ஜெபம்.

ஆண்டவரே, கடந்து போன பகல் முழுவதும் என்னைச் சுகமாகக் காப்பாற்றினதற்காக உம்மைத் துதிக்கிறேன். இந்த நாளில் உமக்குப் பிரியமில்லாமல் செய்த தப்பிதங்களை தயவாய்

இந்த இரவிலும் என்னைக் காப்பாற்றும். என்னை உமது கையில் ஒப்புவித்துச் சமாதானத்தோடே படுத்துக்கொள்ளுவேன். என்னையும் எனக்கு அருமையானவர்கள் யாவரையும் உமது கிருபையால் சுகமாகத் தூங்கச்செய்யும். விழிக்கும்போது உம்மண்டையில் இருக்க எனக்குக் கிருபைசெய்யும். இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறேன் சுவாமி, ஆமென்.

மாலை ஜெபம்.

என் அன்புள்ள சுவாமி, சந்தோஷமான நாள் தந்தீர்; உமக்குத் தோத்திரம்; இப்போது தூங்க நேரம் தந்தீர்; உமக்குத் தோத்திரம். இன்று நான் செய்த தப்பிதங்களை மன்னித்துக்கொள்ளும். வியாதியிருக்கிற பிள்ளைகள் எல்லாரையும், அன்பாய்ப் பாதுகாரும். இதோ நான் தூங்கப் போகிறேன்; என்னையும், பூமியெங்குமுள்ள எல்லாப் பிள்ளைகளையும், காத்துக்கொள்ளும். இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமென்.

...ன் மிஷன் பில்கிங்டன் பிரஸ், ஈரோடு.

ஆண்டவர் அருளின பிரார்த்தனை.

பரலோக தந்தாய்! நின்னாமம்—அதி
பரிசுத்த முறவே, நின்ராஜ்யம்
வரவே நினது திருவுளச் சித்தமே
பரமதில் போலிங்கும் துலங்கிடவே.
அன்றுடம் உணவளித்திடுவாய்;—யாம்
அயலார் செய்பிழை பொறுப்பதுபோல்,
இன்றே எங்கள் பவங்களை பொறுத்தே
நன்றருள்வாய் நர பரிபாலா!
சோதனையறக் கண்பார்த்திடுவாய்;—வரு
தீதனைத்திலும் எமைக் காத்திடுவாய்:
நீதா, ராஜ்யம், வல்லப மகிமை
நினக்கே யுரிய எக்காலமுமே.

ஸ்தோத்திரப் பாட்டு.

சங்கராபரணம். ஆதிதாளம்.

1 சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்!
சிஷ்டிப்பு யாவையும் படைத்தாய் தோத்ரம்!
ஏர்குணனே, தோத்ரம்! அடியார்க்கு
இரங்கிடுவாய், தோத்ரம், மாநேசா!

2 நேர் மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்!
நித்தமு முமதடியார்களின் தோத்ரம்!
ஆர்மணனே, தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மாநேசா!

3 ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்!
தினப் . தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்!
ஆவலுடனே தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மாநேசா!

4 ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்!
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்!
சாற்றுகிறோம் தோத்ரம்! உனது
தருமன்புக்கே தோத்ரம், மாநேசா!

5 மாறாப் பூரண நேசா தோத்ரம்!
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்!